உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. — விக்கிரம வருஷ ஆவணிமீ 1உ — ஆகஸ்டுமீ -1940 — இதழ் 5 No 5

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமி மலை)

ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்
திருவினையி னிடர்கலியோ டாடி நொந்துநொந்
துலையிலிடு மெழுகதென வாடி முன்செய்வஞ் சனையாலே

ஒளிபெறவே யெழுபுமற பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி யாடி விண்பறிந்
தொளிருமின லுருவதென வோடி யங்கம்வெந் திடுவேனைக்

கருதியொரு பரமபொரு ளீது என்றுஎன்
செவியிணையி னருளியுரு வாகி வந்தஎன்
கருவினையொ டருமலமு நீறு கண்டுதண் டருமாமென்

கருணைபொழி கமலமுக மாறு மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் நூபு ரஞ்சரண்
கலகலென மயிலின்மிசை யேறி வந்துகந் தெனையாள்வாய்

திரிபுரமு மதனுடலும் நீறு கண்டவன்
தருணமழ விடையனட ராஜ னெங்கணுந்
திகழருண கிரிசொரூப ஞோதி யந்தமங் கரியாத

சிவயநம நமசிவய கார ணன்சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்ப யந்திடும் புதல்வோனே

குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களுங்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவந் திடுவோனே

குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியவொரு சசிமகளோ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத வும்பர்தம் பெருமாளே.

பதவுரை :

திரிபுரமும் மதன் உடலும் - திரிபுரத்தையும் மன்மதன் உடலையும், நீறு கண்டவன் - சாம்பலாகும்படி செய்தவரும், தருணமழ விடையன் - மிகவும் இளமைப் பருவத்தையுடைய இடபத்தை வாகனமாக உடையவரும், நடராஜன் - சிற்சபையில் ஆனந்தத் தாண்டவம் புரிபவரும், எங்கணுந் திகழ் - அங்கிங்கெனாதபடி எங்குந் தன் னருட்ஜோதி வீசுமாறு, ஆதி அந்தம் அங்கு அறியாத - முதலும் முடிவும் அவ்விடத்தில் (திருமாலும் திசைமுகனும்) காண முடியாவாறு, அருணகிரி சொரூபன் - சிவந்த அழல் மலைவடிவாக நின்றவரும், சிவய நம - சூக்கும ஐந்தெழுத்தானவரும், நமசிவய - தூல ஐந்தெழுத்தானவரும், காரணன் - காரண ஐந்தெழுத்தானவரும், அமுதமதை சுரந்து அருளி - திருவருளாகிய அமுதத்தைச் சுரந்து அருள் புரிந்து, எமையாளும் எந்தை தன் - அடியேங்களை யாட்கொள்ளும் எமது பிதாவாகிய சிவபெருமானுடைய, திரு உருவின் மகிழ் - திருமேனியில் ஒரு பாதியைக் கொண்டு மகிழ்கின்ற, எனது தாய் பயந்திடும் - அடியேனுடைய அன்னையாராகிய உமாதேவியார் ஈன்றருளிய, புதல்வோனே - திருக்குமாரரே! குருகு கொடியுடன் - சேவல் கொடியுடன், மயிலில் ஏறி - மயில்வாகனத்தின் மீது ஆரோகணித்து, மந்தரம் - மந்தரகிரியும், புவன - புவனங்களும், கிரி - ஏனைய மலைகளும், சுழல - மயிற்சிறகினா லுண்டாகுங் காற்றின் வேகத்தால் சுழலவும், மறை ஆயிரங்களும் - ஆயிரம் வேதங்களும், குமரகுரு வென - குமரகுரு என்று துதித்து ஒலமிடவும், வலிய சேடன் அஞ்ச - வலிபெற்ற ஆதிசேடன் அஞ்சி நடுங்கவும், வந்திடுவோனே - பவனி வருகின்றவரே! குறமகளின் இடை துவள - வள்ளிநாயகியாரது மெல்லிய இடை துவண்டு நெளியவும், பாத செம் சிலம்பு ஒலிய - அவருடைய திருவடியிலணிந்துள்ள சிவந்த பொற் சிலம்பு ஒலிக்கவும் (கலந்து), ஒரு சசிமகளோடே கலந்து - ஒப்பற்ற இந்திராணியின் குமாரியாக வந்தருளிய தெய்வானை யம்மையாரையும் கலந்து,

திண் குருமலையின் மருவு குருநாத - தெரிசித்தவர்களது பாவத்தை விலக்கும் விறலுடை சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள குருநாதரே!, உம்பர்தம் பெருமாளே - தேவர்களுக் கெல்லாம் பெருமையின் மிக்கவரே!, ஒருவரையும் ஒருவர் அறியாமலும் திரிந்து - மாயையாகிய திரைமூடப் பட்டிருத்தலால் முற்பிறப்பின் உணர்ச்சி யின்மையால் ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள முடியாமல் அலைந்து திரிந்தும், இருவினையின் இடர் கலியொடு ஆடி - நல்வினை தீவினைகளின் பயனால் வரும் சுக துக்கத்தால் மயங்கி யுலாவி, நொந்து நொந்து - அதனால் மிகவும் உடலும் உள்ளமும் வருந்தியும், உலையில் இடு மெழுகது என வாடி - உலைக்களத்திலிட்ட மெழுகைப்போல் உருகி வாட்டத்தை யடைந்தும், முன் செய் வஞ்சனையாலே - முற்பிறப்பிற் செய்த பாவ கன்மத்தாலே, மரபாவை - பொம்மலாட்டத்தில் மரப்பதுமையை , துன்றிடும் கயிறு விதம் என - நெருங்கிய கயிற்றைக் கொண்டு (சூத்திரதாரி ஆட்டுகின்ற) வகையாக, மருவி ஆடி, உலக விஷயத்தில் கலந்து ஆடியும், விண் பறிந்து ஒளிரும் மின்ல் உருவது என ஓடி - ஆகாயத்தில் வெளிப்பட்டு ஒளி செய்யும் மின்னலைப்போல் ஒரு நொடியில் வாழ்நாள் கடந்து போக, அங்கம் வெந்திடு வேனை - உடல் வெந்தழியப் படுவேனாகிய அடியேனை, கருதி - தேவரீரது அடியார் குழாத்துள் ஒருவனாக எண்ணி, ஒரு பரம பொருள் ஈது என்று - ஒப்பற்ற பெரிய பொருள் இதுவே என்று, என் செவி இணையில் அருளி - அடியேனுடைய இரு செவிகளிலும் உபதேசித்து, உருவாகி வந்த - வினைப்பயனால் உடலெடுத்து வந்த, என் கருவினையோடு - அடியேனுடைய கொடிய வினையையும், அரு மலமும் - அரிய மும்மலங்களையும், நீறு கண்டு - பொடியாகும்படிச் செய்து, தண்தரு - குளிர்ச்சியைத் தருவதும், மா மென் - பெருமை பொருந்தியதும் மேன்மை யுடையதும், கருணைபொழி - திருவருளைப் பொழிவதும், கமல முகம் ஆறும் - தாமரை மலரை யொத்தது மாகிய தேவரீருடைய ஆறு திருமுகங்களும், இந்துளம் தொடை - கடப்ப மலர்மாலையும், மகுட முடியும் - இரத்தினமணி மகுடங்களும் தோன்றவும், ஒளிர்சரண்நூபுரம் - ஒளி செய்கின்ற பாதத்தி லணிந்துள்ள நூபுரங்கள், கலகல என - கலகல என்று ஒலிக்க, மயிலின்மிசை ஏறி வந்து - மயில்வாகனத்தின் மீது எழுந்தருளி வந்து, உகந்து எனை ஆள்வாய் - மகிழ்ச்சியுடன் அடியேனை ஆட்கொண்டருள்வீர்.

பொழிப்புரை :

திரிபுரத்தையும் மன்மதனுடைய உடலையும் சாம்பலாக எரித்தவரும், மிக்க இளம் பருவமுடைய இடபத்தின்மீது எழுந்தருளி வருபவரும், சிதாகாசப் பெருவெளியில் ஆனந்தத் தாண்டவம் புரிபவரும், யாண்டும் நீக்கமற நிறைந்து தன்னருட்

ஜோதிப் பிழம்பு வீசமாறு மாலும் அயனும் மேலும் கீழும் தேடி அடியையும் முடியையும் அறியாமல் திகைக்கும் வண்ணம் சிவந்த நெருப்புமலை வடிவாக நின்றவரும், தூல சூக்கும காரண பஞ்சாக்கரப் பொருளாக விளங்குபவரும், திருவருளமிர்தத்தைச் சுரந்து அடியேங்களுக்கருளி யாட்கொள்ளும் எமது பரம பிதாவாகிய சிவ பெருமானுடைய திருமேனியில் ஒரு பாதியைப் பெற்று மகிழ்கின்ற அடியேனுடைய தாயாராகிய பார்வதி தேவியார் பயந்தருளிய திருக்குமாரரே! சேவற் கொடியுடன் மரகத மயிலின் மீது ஆரோகணித்து, மந்தர மலையும் புவனங்களும் மற்றைய மலைகளும் மயிலினது சிறகின் காற்றின் வேகத்திற் காற்றாது சுழலவும், ஆயிரம் வேதங்களும் "குமரகுரு" என்று துதித்து ஓலமிடவும், வலிமை மிக்க ஆதிசேடன் அச்சமுறவும் பவனி வருகின்றவரே! வள்ளியம்மையாருடைய மெல்லிய இடைதுவளவும் அவருடைய தாமரைத் தாளில் அணிந்துள்ள சிறந்த பொற் சிலம்புகள் ஒலிக்கவும் அவரைக் கலந்து, இந்திராணிக்குத் திருமகளெனத் திருவவதரித்த - ஒப்பற்ற தேவகுஞ்சரி யம்மையாரையும் மருவி, வந்தவர் வினைதீர்க்க வல்லதாகிய சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள ஞானகுருமூர்த்தியே! தேவர்கட்கெல்லாம் பெருமையின் மிக்கவரே! அறியாமையாகிய திரையினால் முற்பிறப்பின் உணர்ச்சியின்மையால் ஒருவரை யொருவர் இன்னார் இனியாரென அறிந்துகொள்ள முடியாமல் திரிந்தும், நல்வினை தீவினை யென்ற இருவினைகளின் பயனாகவரும் இன்பதுன்பங்களினால் ஆடி மிகவும் வருந்தியும், உலையிலிட்ட மெழுகைப்போல் உருகி வாடியும், முற்பிறப்பில்செய்த வஞ்சனையால் பாவைக்கூத்தில் சூத்திரதாரி பலகயிறுகளைக்கொண்டு ஆட்டும் மரப் பாவைப்போல், (உள்ளே உயிருக்குயிராயுள்ள இறைவனால் ஆட்டப்பெற்று) ஆடியும், ஆகாயத்தில் ஒருகணத்தில் ஒளிசெய்து மறையும் மின்னலைப்போல் நிலையற்று வாழ்நாள் கழிந்தவுடன் உடல் வெந்தழியப்படுவேனாகிய அடியேனை, தேவரீரது அடியார் குழாத்துள் ஒருவனாகக்கருதி, ஒப்பற்ற பெரியபொருள் இதுவே என்று அடியேனுடைய இருசெவியினும் உபதேசித்து, வினைப் பயனால் உடலோடு கூடிவந்துள்ள அடியேனுடைய கொடியவினை

யும் அரிய மும்மலங்களும் பொடிபட்டொழியவும், குளிர்ந்ததும் பெருமை பெற்றதும் மேன்மை யுடையதுமாகிய தேவரீருடைய கருணைபொழிகின்ற ஆறு திருமுகங்களும், கடப்பமலர் மாலையும் இரத்தின மணிமுடிகளும் தோன்றவும், ஒளிசெய்கின்ற திருவடிகளி லணிந்துள்ள நூபுரங்கள் கலகல என்று ஒலிசெய்யவும் மாமயிலின்மீது எழுந்தருளிவந்து, உவப்புடன் அடியேனை ஆட்கொண்டருள்வீர்.

விரிவுரை:

ஒருவரையும் ஒருவர் அறியாமல்:—

மாயையானது அறிவை மறைப்பதால் முற்பிறப்பின் உணர்ச்சி கெடுகின்றது. அதனால் முன் பகைவராயினோர் இப்பிறப்பில் உடன்பிறந்தாராதலும், நண்பர் அயலாராக ஆதலும், மனைவி தாயாதலும், தாய் மனைவியாதலுமாக மாறி மாறி வந்தும், அதனை யுணர முடியாமல் ஜீவர்கள் உழன்று வருந்துகின்றனர்.

மரபாவை.........ஆடி:—

பழைய காலத்தில் பொம்மலாட்டம் (பாவைக்கூத்து) என்ற ஒரு கூத்துஉண்டு; அதில் பொம்மை யாடும். அதனைப் பலகயிறுகளை யாட்டுபவனுக்குச் சூத்திரதாரி என்றுபெயர். பாடுபவன் வேறு. காண்கின்றவர்க்கு பொம்மை பாடி யாடுவதாகவே தோன்றும். அது மரப்பாவை;' இவ்வுடம்பு மாமிசப்பாவை; இதனை யுள்ளிருந்து ஆட்டுகின்றவன் குகக்கடவுள்.

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே" —தமிழ்மறை.

இடை பிங்கலை சுழுமுனை முதலிய எழுபத்தீராயிரம் நாடிகளென்கின்ற கயிறுகளைக் கொண்டு இவ்வுடம்பை இயக்குகின்றனன்.

"வளிகயிறி னூட னுடி"— திருப்புகழ்.

கருவினை:—

கருவுற்றுப் பிறத்தற்கு ஏதுவாகிய வினை என்றும் பொருள்படும்.

அருமலம்:—

நீக்குதற்கு அரியமலம். அவை: ஆணவம், மாயை, கன்மம் என்பன.

தண்தரு மாமென்:—

முருகவேளுடைய திருமுகங்கள் குளிர்ந்திருக்கின்றன; பிறவி வெப்பத்தை நீக்கித் தண்மையை யருள்கின்றன.

கருணைபொழி:—

எம்பிரானுடைய முகங்கள் உயிர்களின் துன்பமகல கருணை மழை பொழிகின்றன.

"முகம்பொழி கருணை போற்றி" —முதல்வன் புராணம்.

"உனதுமுக கருணைமல ரோராறும்" —திருப்புகழ்.

திரிபுரம்:—

மும்மல காரியங்கள்.

தருணமழ விடையன்:—

தருமமே சிவபெருமானை இடப வடிவாகி வாகனமாகத் தாங்குகின்றது. தருமம் ஒருபோதும் முதுமையை யடையாது. என்றும் நிலைத்து இளமையாகவே இருக்கும் என்பதனைத் தெரிவிக்கவே, "தருண மழவிடை"யன் என்றனர்.

திகழருணகிரிசொருபன்:—

திருவண்ணாமலைச் சரித்திரத்தைக் குறிக்கிறது; இதனை இவ்வாண்டு ஆனி இதழில் 54-ம் பக்கத்தில் காண்க.

சிவயநம:— சூட்சும பஞ்சாக்ஷரம்.

நமசிவய:— தூல பஞ்சாக்ஷரம்.

காரணன்:—

காரண பஞ்சாக்ஷரம். இதனைக் குருநாதர் மூலம் முறைப்படிக் கேட்டுணர்க.

குருகுகொடி:—

சேவற் கொடி. இது பெருமானுடைய வருகையை திசை யெலாம் செவிடுபடும்படி ஒலித்துத்தெரிவிப்பது. (காரில் வருபவன் ஹாரன் மூலம் வருகையைத் தெரிவிப்பது போலென்றறிக)

"சென்றே இடங்கள் கந்தா எனும்பொ
செஞ் சேவல் கொண்டு வரவேணும்"
—திருப்புகழ்,

மறையாயிரம்:—

முற்காலத்தில் ஆயிர வேதங்கள் இருந்தன. துவாபர யுக முடிவில் அவைகள் கலிக்குத் தக்கவாறு கிருஷ்ணத்வைபாயன ரால் நான்காகத் தொகுக்கப்பட்டன.

"நீயயன் முதற்குல மிதற் கொருவனின்றாய்
ஆயிர மறைப்பொரு ளுணர்ந்தறி வமைந்தாய்" என்ற

கம்ப ராமாயணப் பாடலாலும் இதனைத் தேர்ந்து தெளிக.

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நீர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மன மென் கொல் புகாததே" என்ற

திருநாவுக்கரசு சுவாமிகளது திருவாக்கும் இதனை வலியுறுத்து மாறு காண்க.

கருத்துரை:

சிவகாம சுந்தரியின் திருக்குமாரரே! வேதம் புகழ சேவற் கொடியுடன் மயிற்பரி யூர்ந்து பவனி செய்பவரே! வல்லீதேவசேனா சமேதரே! சுவாமி மலைக் கரசே! வஞ்ச மாயையால் மயங்கி யலையும் அடி யேனுக்கு உண்மைப் பொருளை யுபதேசித்து, மல மாசகல எழுந்தருளி வந்து ஆட்கொண்டருள்வீர்.

ஓம் குஹாய நம :

கந்தரலங்காரம்

(82- வது பக்கத் தொடர்ச்சி.)

(18) வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ணுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போல்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

பதவுரை :

நுங்கட்கு - (உலகினரே!) உங்களுக்கு, இங்ஙன் - இவ்விடத்து, வெய்யிற்கு - வெய்யிலுக்கு, ஒதுங்க உதவா - ஒதுங்கி நிற்க உதவாத, உடம்பின் இந்த யாக்கையின், வெறு நிழல்போல் - பயனற்ற நிழலைப்போல், நும் - உங்களுடைய, கடைவழிக்கு - மரணகாலத்தில் ஆன்மா புறப்பட்டுச் செல்லும் இறுதி வழிக்கு, கையில் பொருளும் - உங்கள் கையிலுள்ள பொருளும், உதவாது காணும் - துணைசெய்ய மாட்டாது என்றதை உணர்ந்து கொள்ளுங்கள் (ஆதலால்,) வையின் - கூர்மை மிகுந்து, கதிர் - ஒளிசெய்கின்ற, வடிவேலோனை - வடித்தெடுத்த வேற்படையை யுடைய முருகப் பெருமானை, வாழ்த்தி - துதித்து, வறிஞர்க்கு - ஏழைகளுக்கு, என்றும் - எக்காலமும், நொய்யின் பிளவு அளவேனும் - நொய்யிற் பாதி யளவாயினும், பகிர்மின்கள் - பங்கிட்டுக் கொடுங்கள்.

விரிவுரை:

வையிற் கதிர்வடிவேல்:--- வேல் என்பது ஞானம். ஞானம் கூர்மையுடையது ஆகும். இதனைப்புலப்படுத்தவே நம் பரமாசிரியராகிய மணிவாசகனார்-

"கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"

என்பாராயினர்.

அன்றியும்ஞானம் ஒளிர்வதுஆகும். அறியாமையாகிய இருளை நீக்கும் நன்மையுடையதாம். இதனையுணர்த்தவே சுவாமிகள் வையிற்கதிர் என்று வேலைச் சிறப்பித்தார். அன்றியும், வடிவேல் என்றது வனையவேல்போல் உலைக்களத்தில் காய்ச்சிவடித்த தன்று. பாசஞான பசுஞானங்களினின்றும் வடித்தெடுத்த பதிஞானம் என்பதனைப் புலப்படுத்துகின்றது.

வேலோனைவாழ்த்தி:-- ஒருபொருளை ஒருவருக்குத் தருமஞ் செய்யும்போது "நான் தருகிறேன்" என்ற எண்ணம் இருத்தலாகாது அங்ஙனமிருக்கின் அது இராஜஸதருமமாம். அங்ஙனமின்றி சத்துவகுணத்துடன் தருமஞ் செய்யினும் அத்தருமத்தினால் வரும்புண்ணியத்தை யனுபவிக்க மீண்டும் பிறக்கவே நேர்கின்றது. பாவம் இருப்புவிலங்கையும்; புண்ணியம் பொன்விலங்கையும் ஒக்கும். ஆதலால் தருமஞ்செய்யும்போது "இப்பொருள் குமரக்கடவுள் கொடுத்தது" என்ற எண்ணத்துடன் "அவனுடைய பொருளை அவனடியார்க்குத் தருகின்றேன்" என்ற எண்ணத்துடன், கொடுத்து, தருமத்தால்வரும் புண்ணியத்தையும் குகார்ப்பணஞ் செய்தல்வேண்டும். அதனால் ஆகாமியம் விளையாது. அதன் பயனாக இருவினையொப்பு மலபரிபாகமுண்டாகும். அதனால், அறஞ்செய்யும்போது வேலோனைவாழ்த்துமாறு உபதேசித்தனர்.

"வறியார்க் கொன்றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து"

வறிஞர்க்குஎன்றும்:-- தருமம் ஏழைகட்கே செய்தல் வேண்டும். அது எப்போதும் செய்யவேண்டும். ஏழைகட்கு ஈவதையே ஈகை என்றார் ஆசிரியர் திருவள்ளுவர்.

பொருளுடையார்க்கு ஈவது ஈகையாகாது. அதுபயன்கருதியேயாம் ஆதலால், வறியோர்க்கு இயன்றவரை எந்நாளும் தருமஞ் செய்ய வேண்டும்.

நோய்யில் பிளவளவேனு பகிர்மின்கள்:--

தருமஞ் செய்தற்கு இயல்பில்லாதவர்கள் இயன்றவரை நொய்யிற் பாதியளவாயினும் ஏழைகட்கு பகிர்ந்து கொடுத்தல் வேண்டும். நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும் என்ற

மூவகைப்பட்ட அறத்தை முறையே மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் இயலுந்திறத்தான் ஓவாது அறத்தைச் செய்தல் வேண்டும்.

"ஒல்லும் வகையா னறத்தினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்"

இக்கருத்தையே சுவாமிகள் திருச்செந்தூர் திருப்புகழிலுந் தெரிக்குமாறு காண்க.

"எனது பொருளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையமுத வசைதவிர இன்றைக் கன்றைக் கெனநாடா"
"திடுக கடிது"

வெய்யிற்கோதுங்க........வெறுநிழல்:--

நமக்கு மிகவும்உரித்தென்று கருதப்படுகின்றஉடம்பின்நிழல் வெய்யிற்கு ஒதுங்கத் தனக்கு உதவாதவாறுபோல், நாம் அரிதிற் றேடிய கைப்பொருள் ஒன்றும், இறுதி நாளில் மரணயாத்திரை செல்லும்போது உடன் வராது. நாம்செய்த அரத்தினாலாய புண்ணியமே உடன்வந்துஉதவும். "எங்காயினும்வரும் ஏற்றவர்க்கிட்டது" என்ற கந்தாலங்கார வாக்கையும் உன்னுக.

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை —திருக்குறள்"

கையிற்பொருளு........கடைவழிக்கே:--

பொருளும் என்ற எச்சவும்மையால், மனைவி மைந்தர் மாடு வீடு முதலியவையாவும் நம்முடன் மறுமைக்குத் தொடர்ந்து வாரா; "பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே"

வாதுற்ற திண்புய ரண்ணாமலையார் மலர்ப்பதத்தைப்
போதுற் றெப்போதும் புகலு நெஞ்சே இந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப்புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே.

என்ற திருவெண்காட்டடிகள் திருவாக்கை இதனோடு கூட்டிச் சிந்திக்கவும். கடைவழிஎன்பது இறுதியில் உயிர் உடம்பை விட்டு செல்லும் மரணயாத்திரையைக் குறிக்கும்.

கருத்துரை:

உலகினரே! வெய்யிற்குதவா உடலின்வெறுநிழல்போல், இறுதியில் உயிர்பிரியுங்கால் கைப்பொருள் முதலியயாவும் பயன்படமாட்டா. ஆதலால், வடிவேற் பெருமானைவாழ்த்தி இயன்றவரை ஏழைகட்கு என்றும் உதவி செய்மின்கள். (தொடரும்)

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(83-வது பக்கத் தொடர்ச்சி.)

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(65) வக்ஷஸ்தாட^{3}நசங்கயா விசலிதோ வைஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்வலரத்நதீ^{3}பகலிகாநீராஜநம் குர்வதே!
த்^{3}ருஷ்ட்வா முக்தி^{4}வதூ^{4}ஸ்தநோதி நிர்பதாச்லேஷம் ப^{4}வாநீபதே
யச்சேதஸ்தவ பா^{3}தபத்^{3}மபஜனம் தஸ்யேஹ கிம் து^{3}ர்லப^{4}ம்!!

பதவுரை.

பவாநீபதே — பார்வதி தேவியின் பதியே!
யச்சேத:—எவனுடைய மனதானது,
தவ—தேவரீருடைய,
பாதபத்மபஜநம் — திருவடிக் கமலங்களுடைய சேவையை உடைத்தாயுளதோ,
த்ருஷ்ட்வா—அவனைக் கண்டு,
வைஸ்வத:—இயமன்,
வக்ஷஸ்தாடநசங்கயா — மார்பினிலுதை கிடைக்குமென்ற பயத்தால்,
விசலித:—ஒடிவிடுகின்றான்,
நிர்ஜரா—தேவர்கள்,
கோடீரஜ்வாலா ரத்நதீப கலிகா நீராஜநம்—தங்கள் தலைகளிலுள்ள மணிமகுடங்களில் ஒளிசெய்கின்ற விளக்குப் போன்ற இரத்தினங்களுடைய மொட்டுகளினால் ஆலாத்தியை,
குர்வதே—செய்கின்றார்கள்.
முக்திவது:—முத்தியாகியபெண்
நிப்ருதாச்லேஷம்—இடைவெளியில்லாமல் தழுவிக் கொள்வதை,
தநோதி—செய்கிறாள். (ஆதலால்,)
தஸ்ய—அவனுக்கு,
இஹ—இவ்வுலகத்தில்,
கிம்—எதுதான்
துர்லபம் — கிடைக்கக் கூடாதது? (எல்லாம் கிடைக்கும்.)

பொழிப்புரை.

ஓம் அம்பிகாபதே! எவனுடையமனம் உமதுபாதாரவிந்த சேவையில் விருப்பமடைகின்றதோ அவனைப்பார்த்ததும் இயமன் நீர் முன்னாளில் மார்பில் உதைத்ததை எண்ணி பயந்து தூரத்தில் ஓடிப்போகின்றான்; தேவர்கள் தங்கள் மகுடத்தில் விளக்குபோல் ஒளிரும் இரத்தினங்களால் தீபாராதனைச் செய்கின்றார்கள்; முத்திபென்னும்பெண் இறுகத்தழுவிக் கொள்கிறாள். ஆதலால் அந்த அன்பனுக்கு இவ்வுலகத்தில் அடையமுடியாத பொருள் ஒன்றுமில்லை எல்லாம் அடையத்தக்கனவே,

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(86-வது பக்கத்தொடர்ச்சி)

திருச்செந்தூரில் அரியணையின் மீது வீற்றிருக்கின்ற அறுமுகக் கடவுள் சூரியோதயத்தில் வீரவாகுதேவரை நோக்கி "தீவினைமிகுந்த சூராதியவுணரழியவும் தேவர்துன்ப மொழியவும் வீரமகேந்திர புரிக்கு இப்பொழுதே போதல் வேண்டும். நமது தேரைக் கொணருதி" என்று பணித்தருளினர். அதுகேட்ட மாலயனாதி வானவர்கள் "எமது துன்பம் தீர்ந்தது" என்று ஆனந்தக் கூத்தாடி இளம்பூரணனை இறைஞ்சினார்கள். மன வேகம் என்னும் தேரும் பாகனாகிய வாயுதேவனும் வந்துநிற்க மறைகள் ஒலிக்க கந்தவேள் தேர்மீது புறப்பட்டார். அவருடைய கட்டளைப்படி பிரமன் திருமால் முதலியோர் தத்தம் ஊர்திகளில் ஊர்ந்து உடன் சென்றார்கள்.

சுப்பிரர்	பரிகநேமி	சிங்கர்	சங்கபாலர்
மேகமாலி	உதவகர்	உத்தரசிங்கர்	நிசாகர்
சுவேதசிரிடர்	புட்பதந்தர்	உபதிட்டர்	சதநாவர்
கபாலி	உருத்திரகாரர்	சபர்	அயக்கிரீவர்
அப்பிரசித்து	வீரர்	ஈசர்	சகத்திரவாகு
சித்திராங்கர்	பதிசர்	மந்தகர்	அயுதாக்ஷர்
சுவாலதாலு	கேதுமாலி	மதங்கர்	அநந்தர்
வச்சிரர்	வக்கிரர்	சண்டி	வாமர்
வீமர்	பிரமகேசர்	மகாபலர்	மங்கலகேசர்
உக்கிரர்	அதிபதி	சுவேதர்	சோமர்
உக்கிரேசர்	கலிங்கர்	நிலபத்ரர்	வச்சிரமாலி
பிப்பலர்	கோரர்	சுவாது	சண்டர்
நந்திசேனர்	அச்சுதர்	அண்டபரணர்	அசமுகர்
பிரமசர்	அசலர்	காகபாதர்	சரபர்
பிரமசேனர்	சாந்தர்	பிங்கலர்	குந்தர்
மதுமர்	சந்திரசேனர்	சமானர்	ஆடகர்
கரானர்	பூரி	மாயர்	கவந்தர்
தண்டர்	சுசிலர்	நிகும்பர்	மேகர்
பத்திரர்	மாசயர்	தும்பர்	விசயர்

வித்துருமர்	இடரூபர்	நந்தி	சிதர்
தண்டி	சுசிமுகர்	மனோபாவர்	சுனதர்
வியாக்கிரர்	அனலகேசர்	வாயுவேசர்	சுமாலி
காலபாசர்	சுபத்திரர்	சிகத்திரபாதர்	மாலி
தசமுகர்	கேது	பானுகம்பர்	அத்திரி
குமுதர்	கோகர்	பதங்கர்	அசுரகாலர்
பானு	மந்தர்	சுந்தர்	அரிகேசர்
தனஞ்சயர்	உன்மத்தர்	அணிசர்	சுவாலகேசர்

என்னும் படைத்தலைவர் 108 ரும் 2000வெள்ளம் பூதர்களும் சூழ்ந்து ஆரவாரித்துச் சென்றார்கள். துந்துபி பேரிகை முதலியன ஒலித்தன. பூதங்கள் கடலிலிறங்கி செல்லும்போது கடல் அப்பூதங்களின் கால் பரட்டினுள் அடங்கியது. கடல் சேராகியது. முருகவேள் இலங்கைமலையை நீங்கி மகேந்திரபுரி முன்சென்றார். திருமாலும் திசைமுகனும் பெருமானை வணங்கி, "ஈனர்களிருக்கும் மகேந்திர புரிக்குத் தாங்கள் செல்வது முறையன்று. இங்ஙனமே தங்குவது நலம்" என்ன, பெருமானும் இசைந்தனர். முருகபிரான் கட்டளைப்படி தேவதச்சன் சிறந்த கோபுரங்கள் வீதிகள் மாடங்கள் நிறைந்த ஒரு பாசறையை மனத்தாற் செய்து ஏமகூடமெனப் பெயரிட்டான். அதில் எம்பெருமான் எல்லோருடனும் தங்கினர். தேவரும் துணைவரும் பராச புதல்வரும் தொண்டுசெய்ய மணித்தவிசில் எழுந்தருளியிருந்தார்.

நாரதமுனிவர் சூரபன்மனுடைய சொலுமங்கடபமேகி சூனைக்கண்டு, "விரைவில் அழிக" என்று எண்ணி, வாயினல் வாழ்த்தினர். சூரபன்மன் "நீ யார்" இங்குவந்த காரணம்யாது? என்று வினவினன், நாரதர் "யான் சிவபெருமான் வாழ்கின்ற உத்தர கைலாசத்தில் வாழ்வேன். உங்கள் குலந்தழைக்கும்படி நாடோறுந் தவஞ்செய்வேன்; இமையவர்க்கு இடுக்கண்செய்வேன்; சுக்கிருடைய நண்பன்; என்பெயர் நாரதன்; உனது ஏவலைச் செய்யும் இந்திரன் வேண்ட சிவபெருமான் உன்னைக் கொல்லும் பொருட்டு கந்தன் என்ற குமாரனை யனுப்பியுள்ளார். அவர் தாரகனையுங் கிரவுஞ்ச வெற்பையுமழித்து, செந்திலில் தங்கி ஓர் ஒற்றனை யனுப்பினர். அவன் மீண்டபின்பு உன்னைக் கொல்லும்

பொருட்டு இந் நகரின் வடபால் வந்திருக்கிறார். இது நான் நேரிற் கண்டது. இதை நினக்கு அறிவிக்கவந்தேன்" என்று கூறினார். சூரன் கேட்டு சினந்து, "சிங்கங்களைக்கொல்ல ஒரு யானைக்கன்று மான்கூட்டங்களுடன் வந்தாற்போல், அச்சிறுவன் நம்மைக் கொல்லப் பூதர்களுடன் வந்தது வெகுநேர்த்தி! 1008 அண்டங்களுக்கும் அதிபனாகிய என்னை ஒருபாலகனா வெல்லவும் கொல்லவுஞ் சமர்த்தனாவான்? சாம்பலைப் பூசும் சிவகுமாரனை இக்கணமே என் குமாரனாகிய பானுகோபனை யனுப்பிக் கொல்வேன். இதனை நீ நேரிற்காண்குதி" என்றான். நாரதர் "நன்று! நன்று!! தாமதஞ் செய்யாதே உடனே படைகளுடன் அனுப்பு. நான் உங்களுக்கு வெற்றியுண்டாகும் பொருட்டுத் தவஞ்செய்யப்போவேன்' என்று சொல்லிப்போயினார்.

சூரபன்மன் அருகில்நின்ற கோரன் உற்கோரன் என்னும் ஒற்றர்களைப் பார்த்து, "சமுத்திரராஜனை விரைவிற் கொணர்தி" என்றான். உடனே அவர்கள் வருணனைக் கட்டி இழுத்துவந்தனர். சூரபன்மன் அழலெழ விழித்து "வருணனே! சிவபுதல்வனையும் பூதரையும் நமக்கு மாறாக இங்கு விட்டதென்னை?" என்றான். வருணன் "அசுராதிபதி! சிவமைந்தன் மாயவன் முதலிய வானவருடன் விண்வழியே சென்றனர். பூதங்கட்கு யான் பாதம்பாடு வரையிலும் அமைந்திலேன். அவர்களை எவ்வாறு தடைசெய்வேன்? யான் அழுது புலம்பினேன். அகத்தியரைப்போல் ஒரு பூதம் அள்ளிக்குடித்துவிடும்; என்மீது குற்றமில்லை. இடியைப் பாம்பு விலக்கவல்லதோ?" என்றான். அப்போது ஒற்றர் முருகருடைய வரவைவந்து சூரனிடம் கூறினர். சூரன் கேட்டுச் சினந்து பானுகோபனை யழைத்து வருமாறு பணித்தான்.

தூதர்கள்போய் சொல்ல பானுகோபன் சகல ஆடம்பரத்துடன் வந்து பிதாவைவணங்கி நின்றான், சூரபன்மன், "மைந்த! தாரகனைத் தடிந்த கந்தவேள் நந்திகணத் தலைவருடன் பூதர்சூழ இந்நகர வடக்குவாயிலில் வந்துளான். கள்வனாகிய மாலும் அயனும் இந்திரனும் பிறதேவரும் அவனுக்கு ஏவல் செய்துகொண்டு அங்கிருக்கின்றனராம். நமது வீரமகேந்திரபுரி அத்துணை எளிதாயிற்றோ? நன்று! நன்று!! குழந்தைமீது நான் போர்செய்யச்

செல்வது முறையன்று. சிவகுமாரன்மீது என் குமாரனுகிய உன்னை அனுப்புவதேமுறை. ஆதலால் நீ போய் விரைவில் அழித்துவிட்டு வருவாய்'' என்றனன். பானுகோபன் உடல் புளகித்து "பிதாவே! இப்போதே சென்று சிவகுமாரன் முதலியோரைக் கொன்று, மாலயனுதி வானவரைப் பிடித்துக் கொணர்வேன். பிறகு நீர் அவர்களை தண்டிப்பாய். இது எனக்கு ஒரு பெரிய செயலன்று'' என்று விடைபெற்று தனது மாளிகை சேர்ந்தான். தனது படைகளை அமைக்கக் கட்டளையிட்டான்.

ஆயுத சாலையிற்போய் வீரலக்குமியை வழிபட்டு வில் வாள் கதை முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, தும்பை மாலையைச் சூடிக்கொண்டு மோகப்படைக்கலத்தையும் எடுத்துக் கொண்டு போர்க்கோலங் கொண்டு புறப்பட்டான். விசயன், சண்டன், மகிடன், சூனியகேது முதலிய அவுணப் படைத்தலைவர்கள் பலதெய்வப் படைக்கலங்களை யேந்தி; மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்கள். இருபதினுயிரம் வெள்ளம் அசுரசைன்யங்கள் சூழ்ந்து சென்ருர்கள். முப்பதினுயிரம் குதிரைகள் பூட்டிய தேரின்மீது, கொடி குடை ஆலவட்டம் முதலிய உபசாரத்துடன் பானுகோபன் செல்வானுயினுன். ஒருகோடி சேமத்தேர்கள் சென்றன.

பானுகோபன் போருக்கு வருவதைக்கண்ட நாரதர் முருகப் பெருமானிடம் போய் தெரிவித்து "எம்பெருமானே! பானு கோபனை வெல்வார் சிவமூர்த்தியையன்றி வேறுயாருமில்லை மாலயனை வென்றவன். பெரியமாயாவி வருணனுடைய பாசத்தையும் இயமனுடைய சூலத்தையும் கவர்ந்தவன். அவனைக் கொல்லத் தாமே செல்லுதல் வேண்டும்'' என்ருர். கந்தப் பெருமான், அருகில் நின்ற வீரவாகுதேவரை நோக்கி, "நீ ஆயிரம் வெள்ளம் பூதங்களுடனும் இலக்கத்தெண்மருடனும் சென்று பானுகோபனேடு போர்செய்து வென்று மீளுதி'' என்று ஆஞ்ஞாபித்தனுப்பினுர். பிறகு நாரதரைநோக்கி, "சரபப்பறவைகளைச் சிங்கக்குட்டிகள் வெல்லுமோ? முடிவைக் காணுதி'' என்றுதிருவாய் மலர்ந்தருளினுர்.

(தொடரும்)

உ

ஓம் குஹாய நம:

கற்பு.

(92- வது பக்கத் தொடர்ச்சி)

நளாயனி

மௌத்கல்யர் நளாயனியை நோக்கி, பேரழகுடைய பெண்ணமுதே! என்பெயர் மௌத்கல்யன். பொன்னுலகத்தில் கற்பக நிழலில் இருக்கும் பேறுபெற்றவன். கணவனையே கடவுளெனக் கருதுங் கற்புடைக் கன்னியை விரும்பித் தேடினேன். நின்னை யொப்பார் மூவுலகிலுமில்லை யென்று கேள்வியுற்றேன். நின்னை என் வாழ்க்கைத்துணைவி யாக்கிக்கொள்ள நினைக்கின்றேன். நின்னைக்கண்டவுடன் என்னுள்ளம் உன்பால் பொருந்தியது நீ எனது கண்வழிவந்து கருத்திற் கலந்துவிட்டனை. உனக்கும் எனக்கும் ஊழ் இங்ஙனம் உண்டுபோலும். "என்மகளிசைந்தால் மணந்துகொள்ளலா" மென நின் தந்தையுந் தெரிவித்தார். ஆதலால், நின் கருத்துயாது? கூறு" என்று கேட்டனர். நளாயனி கேட்டு, முன்னொருசமயம் "தவமுனி யொருவருக்குத் தருமபத்தினியாக நீ திகழ்வை" என்று தன்னைநோக்கி நாரதர் கூறியதையும், அதற்குத் தக்கவாறு மௌத்கல்யர் வரநேர்ந்ததையும் எண்ணி, மௌத்கல்யருடைய பேரழகில் ஈடுபட்டு, புன்முறுவல் பூத்துநின்றாள். தமது தலைவியின் உட்கருத்தை யுணர்ந்த பாங்கியர், தவமுனிவரைத் தொழுது, "பெருந்தகையீர்! உம்மைஎமது அரசிளங்குமரி விழைவுற்றனள். ஆதலால், நீர் அரசனிடமறிவித்து வன்னிசான்றாக வதுவை செய்துக்கொண்டருள்வீர்" என்றனர். மாமுனிவர், "பாங்கியரே! உங்கள் தலைவியின் வாய்வழியே இச்சொல் வருவதை விழைகிறேன்; அதுபிறகு ஐயத்திற்கு இடமுண்டாகாது" என்றார். அதுகேட்ட நளாயனி, மிகவும்நாணி சொற்கள்குழற குழலினுமினிய குரலுடன் கொஞ்சுமொழியால் "அருமைத்துணைவ! உம்மைக்கண்டவுடன் காதல் என்ற சொல்

னுக்குப் பொருள் இத்தன்மைத்து என்பதையுணர்ந்தேன். தாங்கள் என் இதயகமலத்தில் எழுந்தருளிவிட்டீர். இனி அங்கு வேறு யாருக்கும் இடமில்லை. என்னுளையும் உணர்வையும் உயிரையும் உருக்கிவிட்டீர். இனி தாமதியாது என்னை உமது துணைவியாக்கிக் கொண்டருள்வீர்'' என்றாள்.

தவமுனிவர், ''தையல்நாயகியே! நீ என்னைக் காதலித்ததற்கு அடையாளமாக ஒன்றைத்தருவாய். நான் அதனை நின் தந்தைபாற்காட்டி ஆவன செய்வேன்'' என்றார். உடனே நளாயனி தனது வலக்கரத்தில் பாலசூரியனைப்போல் ஒளிசெய்துகொண்டிருந்தசிறந்தகணையாழியைக்கழற்றிமௌத்கல்யரிடமீந்து,''காதற் களஞ்சியமே! நீரே எனதுஉடலுக்கும்உயிர்க்கும்உரியவர்; என்னை ஏற்றுக்கொண்டு காத்தருள்வீர்'' என்று தொழுதாள். மாதவர் மனமுருகி ''மடவரால்! அங்ஙனமே நின்னை மணந்துகொள்வேன்; வருந்தற்க'' என்று உறுதி கூறிவிட்டுப் புறப்பட்டார். அவர் மறையும் வரை அவரையே நோக்கி நின்ற நளாயனி அவர் மறைந்தவுடன் ஆவிசோர்ந்து வீழ்ந்தனள். தோழியர் அவளைத் தேற்றி பள்ளியறையிற் சேர்த்தனர். பஞ்சணைமீது அம்மங்கை விரகவேதனையால் பெரிதும் நொந்து சிந்தை மயங்கி யிருந்தனள். தாதியர் பன்னீர் தெளித்தும், மயில் விசிறியைக் கொண்டு மென்காற்றுண்டாக்கியும், சந்தனக் குழம்பு தடவியும் உபசரித்துக் கொண்டிருந்தனர்.

மௌத்கல்யர் கன்னிமாடத்தைத் தாண்டியவுடன், பழையபடியே விருத்த வேடந்தாங்கி, நளமன்னன் கொலுக்கூடஞ் சேர்ந்தார். வேந்தன் அவரை வரவேற்று இருக்கை தந்து இறைஞ்சினான். அருந்தவ அடிகள் அரசனை நோக்கி, ''நீதி தவறாத நிருப! நின்தவக்குமரி என்னை அன்புடன் வரவேற்று, காதல் கொண்டு மணந்து கொள்ளவும் இசைந்தாள் என்பதை இக்கணையாழியே விளக்கிக் கூறும்'' என்று அதனை அரசனிடம் தந்தனர். செல்வப் புதல்வியின் திருவாழியைக் கண்ட நரபதி திடுக்கிட்டு ''என்னே இம்முனிவரது மாயம்? நம்குலக்கொழுந்தை எவ்வாறு மயக்கிவிட்டனர்? இவருடைய விருத்த வயதெங்கே? அவளுடைய

இளமைவயதெங்கே? அவள் இத் தொண்டுகிழவனைக் கண்டு காதலிப்பது என்பது எவ்வாறு பொருந்தும்? இது ஏதோ பெருஞ் சூழ்ச்சியாயுளது. இதனை யமைச்சருடன் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவோம்'' என்று எண்ணி, தனியிடம் போய் அமைச்சரிடம் நிகழ்ந்தது கூறி "இனி செய்யத் தக்கது யாது?'' என்று உசாவினன்.

அமைச்சர்கள், "அரசரேறே! இந்த முனிவர் ஏதோ வஞ்சனையால் அந்தக் கனையாழியைக் கவர்ந்திருக்க வேண்டும். இன்றேல் ஏதோ சொக்குப்பொடி தூவிக்கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனல், முனிவர் பெண்பித்துக் கொண்டவரு மல்லர். இதில் ஒரு பெரிய இரகசிய மிருக்கிறது. முனிவரோ நளாயனியின்பாற் சென்று அவளைக் காட்டி விருப்பத்தைத் தெரிவுணர்ந்த பின்னரே செய்யத் தக்கதைச் செய்யவேண்டும்'' என்றனர். இறைவன் அதற்கு இணங்கி மௌத்கல்யருடன் கன்னி மாடத்திற்கு வந்தனன். பிதாவைக்கண்ட நளாயனி எதிர்கொண்டு தந்தையையும் அவனுடன் வந்த தவசியையுந் தாழ்ந்து நின்றாள். நளன்மகளை வாழ்த்தி, "அருந்தவத்தானுதித்த ஆரணங்கே! இந்த முனிவர் பெருமானை மணக்க நீ இசைந்து இந்தக் கனையாழியைத் தந்ததுண்டோ?'' என்று வினவினன். நளாயனி திடுக்கிட்டு முனிவரை நோக்கித்தான் முன்கண்ட பேரிளமையும் கட்டழகையுங் காணாது திகைத்து, "என்னே! இது? நம் ஊழ் இங்ஙன மிருந்தது போலும். முன் கணவனென்று உடன்பட்டபின் உருவங் கண்டு இப்போது மறுப்பது கற்பாகாது. உருவம் சிறப்புடைத்தன்று. கற்பின் ஒழுக்கமே சிறந்ததாம்'' என்று எண்ணி "பிதாவே! யான் இவரை அன்புற்றது உண்மையே. இவரிடம் என்னை ஒப்புவித்து விடுவீர்'' என்றனள். இறைவன் மகளது கற்புறுதிக்கு மகிழ்வுற்றும், விருத்தனை மணந்து சொல்வதற்கு துன்புற்றும் ஒருவாறு தானும் உடன்பட்டு, முனிவருடன் ஆன்மனை சேர்ந்து, மணநாளைக் குறிப்பிட்டு, மன்னர்கட்கும், மாதவர்கட்கும், புலவர்கட்கும் மங்கலவோலை தூதர்கள் மூலம் அனுப்பினன். திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் விரைவாக நடந்து கொண்டிருந்தன.

வீதிகளைச் சந்தனத்தால் மெழுகி, கஸ்தூரி, குங்குமக் குழம்பு இவைகளால் கோலமிட்டு, பன்னீர் தெளித்து, நறுமலர்களை இறைத்தனர். தோரணங்கள் பல கட்டினர். மாவிந்த நகரத்தில் உள்ள ஒவ்வொருவருந் தங்கள் வீட்டில் திருமணம் நடப்பதாகவே எண்ணி குதுகலித்து தங்கள் தங்கள் வீட்டை யலங்கரித்தனர். மன்னர் குழாங்களும், மாதவர் கூட்டமும், புலவரீட்டமும் வந்து திரள் திரளாகக் கூடின. நளன் அவரவர்கட்குத் தக்கபடி உபசரித்துத் தனித்தனி இடமளித்து நல்லுணவீந்து மகிழ்வித்தான். பாலாறும் நெய்க்குளமும், தயிர்மடுவும், அன்னமலையும், தேன்கிணறுமாக அங்கு நிறைந்திருந்தன. திருமணத்திற்கு வந்தவருக்குப் பசிதாகமின்றி அவ்வப்போது வேண்டுவனவெல்லாம் பரிசனங்கள் தாயினும் சாலப்பரிந்து கொடுத்துக் கொண்டிருந்தனர். திருமண நாளன்று மௌத்கல்யரை நன்னீராலாட்டுவித்தார்கள். நளாயனியை மங்கல நீராட்டுவித்தார்கள். பல்கோடி சுமங்கலி மாதர்கள் சூழ, வெண்சாமரம் இரட்ட, அரம்பையர் ஆட, இயக்கியர் பாட, நளாயனியைப் பிடியானைமேலேற்றித் திருமண மண்டபத்தில் சேர்த்தனர். மௌத்கல்யரையும் நளாயனியையும் மணவறையில் இருத்தி முறையே மணச்சடங்குகள் நடந்தன. நளன் தனது மகளுடைய மலர்க்கரத்தை மௌத்கல்யர் திருக்கரத்தில் வைத்து தமயந்தி நீர்வார்க்க, "எனது மகளை ஏற்றுக் கொள்வீர்" என்று கன்னிகாதானஞ் செய்தளித்தனன். பிறகு மங்கல நாண்பூட்டுதல், பொறி சிந்துதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் முதலிய சடங்குகள் விதிப்படி நடந்தன. மங்கல வாத்திய ஒலியும், வாழ்த்தொலியும், பாடலொலியும் ஆடலொலியும் எழுகடலை யடக்கின. வறியருக்கு வெறுப்புண்டாகும்படி மன்னன் வாரிவாரிச் செம்பொன் வழங்கினன். அமிழ்தினுமினிய உணவுண்டு யாவரும் உள்ளங் களித்தனர். ஆங்காங்கு செவிக்குணவுதரப் பட்டது. பட்டாடை பலருக்கு வழங்கப் பட்டது. அந்தணர் கட்கு வேண்டியன தந்தார்கள். எங்கும் ஒரே கொண்டாட்டம். சந்தனத்தையும் பன்னீரையும் வாரிவாரி இறைத்தார்கள். ஒரு சிலர் மௌத்கல்யரைக் கண்டு, "இந்தக் கிழப்பருவத்தில் இவருக்குக் கல்யாணம் அவசியமோ?" என்பார். "நளன் எவ்வாறு இதற்கு உடன் பட்டான்" என்பார். "திருமகளையொத்த இம்மணமகளுக்கு இது உடன்பாடுதானோ?" என்பார். "விதியின் பயன் இப்படி இருந்தது போலும்" என்பார். பலர் பலவாறு தமக்குள் பேசிக்கொண்டனர். ஐந்துநாள் வரை திருமணவிழா நடந்தது. பிறகு அவரவர் அரசனிடம் விடை பெற்றுத் தத்தம் இருக்கை புக்கனர்.

(தொடரும்)

ஓம் குஹாய நம :

புவியரசும் கவியரசும்

பண்டைக்காலத்தில் பாவேந்தர் பலர் இருந்தனர்; நன்கு தமிழை ஆராய்ந்து சொல்லாழும் பொருளாழமுமுள்ள பற்பல கவிகளைப்பாடுவார்கள். அப்பாவேந்தருக்குப் பூவேந்தர் பரிசுபல வழங்கி ஆதரிப்பது வழக்கம்.

உலோபகுணமுள்ள ஓரரசன் புலவர்களை ஏமாற்ற ஒருதந்திரஞ் செய்தான். அவன் ஏகசந்த கிராஹி; ஒருமுறை பாடலைக் கேட்டவுடன் திருப்பிச் சொல்லிவிடுவான். அவனிடமிருந்த ஒரு வேலைக்காரன் துவிசந்த கிராஹி; இருமுறைக் கேட்டவுடன் சொல்லிவிடுவான். ஒரு வேலைக்காரியு மிருந்தாள். திரிசந்தகிராஹி; மூன்றுமுறை கேட்டவுடன் திருப்பிச் சொல்லிவிடுவாள். யாராவது ஒருபுலவன் பாடலைப் பாடிக்கொண்டு அவ்வரசனிடம் வந்தால், அரசன் அவர்களை உபசரித்து, "நீர்பாடி எழுதிக்கொண்டு வந்த பாட்டு நீரே ஸ்வயமாகப் பாடியதானால் அப்பாடல் எழுதியுள்ள ஏட்டின் நிறையளவு பொன்தருவேன்; இன்றேல் ஒன்றுந் தரமாட்டேன்" என்று, பாடச்சொல்வான். புலவர் பாடியவுடன் அரசன் "பளா! வெகுநேர்த்தி; இதுமுன்னொரு காலத்திலேயே ஒருவர் பாடக்கேட்டுளேன்; இது நீர்பாடியதன்று" என்று தான் ஏகசந்தகிராஹி யாதலால் உடனே அப்பாடலைத் தான்சொல்லுவான். அரசன் மீண்டும் "இதுமட்டுமன்று இப்பாடல் எனது பணியாளனுக்கும் தெரியும்" என்று அவ் வேலைக்காரனைப் பாடச்சொல்வான். அவன் புலவர் அரசன் இருவரிடங் கேட்டிருப்பதால் உடனே அப்பாடலைப்பாடி விடுவான். மீண்டும் அரசன் என் வேலைக்காரிக்கும் இப்பாடல் தெரியும்" என்று திரைமறைவில் 3 முறைகேட்ட அவளைப் பாடச்சொல்வான். அவளுந்துரிதமாகப் பாடுவாள். அரசன் "ஓ புலவரே! பழம்பாடலைக் கொணர்ந்து யாரை ஏமாற்ற வந்தீர்? போம் போம் என்று அப்புலவரிடம் ஏதாவதிருந்தாலும் கவர்ந்துகொண்டு ஓட்டிவிடுவான். இப்படியே தன்னிடம் வரும் பாவலரை யெல்லாம் அக்காவலன் ஏமாற்றிக் கொண்டிருந்தான்.

ஒரு பெரும்புலவர்; இவ்வரசன் செய்யுந் தந்திரத்தைக் கேள்வியுற்று மிருந்த கடினபதங்களை யுடையதாயும் முடுகு சந்தம் உடைய ஒரு பெருங்கவியைப் பாடினர். அப்பாடல் 100 தரம் சொன்னாலும் மனத்தில் பதிவது கடினமாக இருந்தது.

ஒரு இரட்டை மாட்டுவண்டியை ஓட்டிக் கொண்டு அரண்மனை வாயிலின் முன்நிறுத்திவிட்டு, புலவர் புரவலன்முன்வந்து வாழ்த்தினார். அரசன் அவரை வணங்கி வழக்கம்போல் உபசரித்து, "வந்த காரணம் யாது?" என்று வினவினான். பாவாணர், "அரசே! நான் பாடலை பாடிக் கொணர்ந்துளேன்; பரிசுதர வேண்டும்" என்றார். அரசன் நகைத்து, "பாவலரே! நம்முடைய சமூகத்தில் ஒரு ஏற்பாடு உண்டு; தாங்கள் பாடுகின்ற பாடல் உண்மையில் நீரே புதிதாகப் பாடியதானால் அப்பாடல் எதன்மீது எழுதியுள்ளதோ அவ்வேட்டினை எடைபோட்டு அதன் நிறையளவு பொன் தருவேன்; அப்படிக்கின்றி அது பழம்பாடலாக இருந்தால் உம்மிட முள்ளதையும் பிடிங்கிக் கொண்டு ஓட்டிவிடுவேன்" என்றான். புலவர் "புரவல! என்ன விந்தை? பழையபாடலை நான் பாடுவேனோ? நானே புதியதாய்ப் பாடிய பாடல்தான்" என்றார். அரசன் "சரி பாடும்" என்றான்.

புலவர் அந்த கடினமான சந்த முடுக்குக்கவியைப் பாடினார். அரசன் அப்பாடலை மனதில் வாங்குந் திறமை யற்றுத் திகைத்து நின்றான். தன் சேவகனை விழித்துப் பார்த்தான். அவன் இவனைப் பார்த்தான், இவன் அவனைப் பார்த்தான். வேலைக்காரிக்குக் கட்டளை யிட்டான்; அவளும் விழித்து நின்றாள். பின் வேந்தன், "கவிவாணரே! இது நீர்பாடியபாடல்தான். இதனை யெழுதிய ஏட்டை யெடும். நிறுத்துப் பொன் தருவேன் என்றான். புலவர் "அரசே ஏட்டை யிறக்க 10பலவான்களை யனுப்பவேண்டு" மென்றார். அரசன் அதுகேட்டுத் திடுக்கிட்டு," ஒருபனை ஏட்டைத் தூக்க பத்துப்பேர் வேண்டுமா?" என்றான். புலவர் "வேந்தே! நான் இந்தப் பாடலைப் பாடும்போது பனையேடு கிடைக்கவில்லை. பக்கத்தில் 10-அடி சச்சதுரமான கருங்கற்பாரை யிருந்தது. நின்புகழமைந்த அப்பாடல் சிலையில் எழுத்தாய் அழியாமல் இருப்பது நன்றென்று அக்கருங்கல்லின் மீது எழுதி அதனை வண்டியிலேற்றிக் கொணர்ந்திருக்கின்றேன். ஆள் அனுப்பி எடுத்துவரச் செய்யும்" என்றார். அரசன் தான் கூறிய நிபந்தனைக்குக் கட்டுப் பட்டவனாகி அப்பாரையைத் துலையில் இட்டு அதற்குச் சமமான தன் பொக்கிஷத்திலிருந்த பொற்குவியலை யெல்லாம் ஏற்றி ஒருவாறு சரிப்படுத்தி புலவரை யனுப்பி விடையனுனன். கவியரசு புலியரசை வென்று அப்பொற்குவியல்களை எடுத்துக் கொண்டு பல ஏழைகளுக்குதவிப் பொன்றாப் புகழைப் பெற்றனர்.

ஓம் குஹாய நம:

முருகரும் தமிழும்

(4-வது மலர்: 328-வது பக்கத்தொடர்ச்சி)

திரு. ராவ்சாஹிப், வ. சு. செங்கல் வராயப் பிள்ளை, M. A.

மேற் கூறியவாறே, பிற்காலத்தும் முருகக் கடவுளின் அநுக்கிரகம் பெற்று அவர்மீது தமிழ்ப் பாடினர் பலர்.

பகழிக் கூத்தர் என்னும் வைணவர் முருகன் அருள்பெற்று, வயிற்றுநோய் நீங்கத் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் பாடினர்.

வென்றிமாலைக் கவிராயர் முருகன் அருள்பெற்று திருச்செந்தூர்ப் புராணம் பாடிய சரித்திரமும் அப்புராணத்திற் காணக் கிடைக்கும்.

சிதம்பரசுவாமிகள் முருகன் திருவருட்டுணையைக் கொண்டு திருப்போரூர்ச் சந்நிதிமுறை பாடினர்.

கச்சியப்ப முனிவர், தமது அருமைமாணாக்கரும் விசேட பத்தியுடையவருமான கந்தப்பையரது வயிற்றுநோய்நீங்கத் திருத்தணிகை யாற்றுப்படையைப் பாடி முருகபிராற்குத் தமிழில் உள்ள ஆர்வத்தைப் பிரகாசப்படுத்தினர்.

சுப்பிரமணிய முனிவர் என்னும் அமிர்தகவிப் புலவர் சுப்பிரமணியர் திருவிருத்தமும் திருத்தணிகைத் திருவிருத்தமும் பாடித் தம்மைச் சரணடைந்த இருவர்களுக்கு முறையே சேர்ந்திருந்த குட்டரோகத்தையும் அந்தகத் தன்மையையும் தீர்த்தனர்.

கந்தப்பதேசிகர் தணிகாசலஅநுபூதி பாடி ஒருவருடைய நோயைத் தீர்த்தனர். இங்ஙனம் முருகன் அருள்கொண்டு தமிழ்ப்பா பாடின பெரியோர்கள் பின்னும் பலருளர். விரிக்கிற் பெருகும் என்று விடப்பட்டன.

இவை யெல்லாம் நூல்களிற் கண்டன. எம்பெருமானது தமிழ்ப் பேரன்பு இன்றும் வெளிப்பட நிற்கின்றதென்பதற்குச்

சில வருடங்களுக்கு முன்பு அடியேன் கண்ட கனநிகழ்ச்சி யொன்று சான்றாக உளதாதலின், அதனையும் கூறுவேன். பெரு மிதத்தாற் கூறியதென்று அன்பர்கள் கொள்ளாதிருக்க வேண்டு கின்றேன். ஆறு வருடங்களுக்கு முன்பு (1934) திருத்தணி கைக்கு நான்போய் முருகக் கடவுளின் சந்நிதியில் நின்று திருத் தணிகைக் குரிய திருப்புகழ், அலங்காரம், அந்தாதி முதலிய பாடினபொழுது அந்தாதியில் "சேர்ப்பது மாலய" என்னும் பாடல் முழுமையும் ஞாபகத்துக்கு வாராத காரணத்தால், அரை குறையாக அப்பாடலைச் சொல்லமுயலுவதை விட வேறு அலங் காரச் செய்யுள்களைப் பாடலாம் என்று பாடி வீட்டுக்கு வந்தேன். அன்றிரவு என் கனவில் செந்தமிழ்ப்பிரான் ஒரு மறைச்சிறுவர் கோலத்துடன் வந்து "நல்ல எலுமிச்சம் பழத்தை மறந்தாயே" எனக் கூறி ஒரு ஆற்றங் கரையிற் கொடிவழியாகப் போய்க் கொண்டிருந்த என்னை வழி மறித்தனர். நான் "எங்கு மறந் தேன்?" என நான் அப்பிள்ளையை வினவ "கந்தரந்தாதியில்" என விடை யளித்தனர். ஆ ஆ! நீ சிறுவனல்ல! நீதான் முருகன்! என அவரைக் கட்டியணைக்க நான் முன்செல்ல அந்தச்சிறுவர் ஓடிமறைந்தனர். கந்தரந்தாதியில் எம்பெருமானுக்கு எவ்வளவு ஆசைபார்த்தீர்களா! அதில் ஒரு பாடலை எலுமிச்சம்பழப் பாட்டு எனப்புகழ்ந்தனர். இன்னும் அவருக்குகந்த மாம்பழப் பாட்டு, பலாச்சுளைப் பாட்டு முதலியனவும் உண்டுபோலும். தமிழ்ச்சுவை தெரிந்த முருகருக்கு அல்லவோ அப்பாடல்களின் உண்மைப் பெருமை விளங்கும். முருகன் இங்ஙனம் கனவிற் றோன்றி அருணகிரியாரின் செந்தமிழ்ப் பாக்களில் தமக்குள்ள ஆர்வத்தைக் காட்டிய நிகழ்ச்சியை நினைந்து மகிழ்ந்து பின் வரும் பாடல்களையும் பாடினேன்; வியந்தேன்; விம்மிதம் உற்றேன்.

சந்நிதியில் நின்றுபுகழ் அந்தாதி பாடுந் தருணத்தில் அந்தாதியில்
தணிமலைக் குரியதாம் சேர்ப்பது மாலெனத் துவக்குந் தனிப்பாடலை
அந்நிலையில் ஓதுதற் கடியேன் மறந்திடலும் அன்றிரவில் என்கனவிலே
அண்டியொரு விப்பிரச் சிறுவனுப்த் தோன்றியுடை அங்கம் ப்ரகாசமாக
நன்னிறத் தேகத்தில் வெண்ணிறத் திருநீறு நன்றொளிர எதிரில் நின்று
"நல்ல எலுமிச்சம் பழமொன்று கந்தரந் தாதியில் மறந்தனை" என
என்னெதிரில் நின்றநீ சிறுவனல முருகனே என்றுரைத் தியான்பிடிக்க
எழுமுனே சிறிதோடி திருவுரு மறைந்த முருகேச தணிகேச இறையே.

ஓடி மறைந்த உடனே என் உடலஞ் சிலிர்க்க விழித்தெழுந்தேன்
நாடி யென்னையும் ஒருபொருளா நயந்த கருணை என்னென்பேன்
வாடி வாடி முருகேசா வாவா என்றே அலறுவேன்
தேடி உனையான் பிடிக்குமொரு திறமே ஒன்றே திகைப்புற்றேன்.

நினைக்கும் என்னையும் தேற்றுதல் வேண்டுமே
தனைக்கும் எந்தைக்கும் ஓம் பொருள் சொற்றனை
நனைக்கும் நானிலம் கைவிடின் நன்னெஞ்சக்
குகைக்குள் தங்கு குழந்தைக் குமரனே.

மேற்கண்ட சரித்திரங்களால், முன்னர்க் கூறியவாறு முருகக் கடவுள் எவ்வெவ்வாறு தமது தமிழ்க் காதலை வெளிப்படுத்தினர் என்பது வெள்ளிடை மலைபோல விளங்குகின்றதல்லவா? அவர் தமிழை ஆய்வார், தமிழைப் பாடுவார், பாடுவார்க் கருளுவார், அடியெடுத்துக் கொடுப்பார், தமிழுக்காகத் தனிவழி நடப்பார், கனவில் வருவார், வேல்கொண்டு நாவிற் பொறித்துத் தமிழ் பாடச் செய்வார்.

கவிசொல் எனக் கட்டளையிட்டு யார்யாருக்கு முருகபிரான் அடியெடுத்துக் கொடுத்தார் என்பது பின்வரும் க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்ச செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

"புலியில் நக்கீரனையும், ஔவையையும், நீ முன் புகழ்ந்த
"பொய்யா மொழியையும், புகழ்கொண்ட அருணகிரிநாதரையும்,
"வெருசித்தர் போற்று கருவூரரையும், ** நல்ல பகழிக் கூத்தரையும்**
"காசிவாழுஞ் சிவானந்த குமர குருபர முனியையும்,
"கவிசொ லென்றே அடி எடுத்துக் கொடுத்தவன் கனிவாயின் முத்தமருளே
கந்தனே புள்ளூரில் வந்த முத்துக்குமர கனிவாயின் முத்தமருளே"

முடிவு

தமிழ்க் கல்வியையும், தமிழ் விருத்தியையும் நாடினோர் தமிழ்க்கடவுளாம் முருகரையன்றி வேறு நாடுவதற்கு இடமில்லை என்பது இக்கட்டுரையின் தேர்ந்த முடிபாகும்.

துதி.

செந்தமிழ்க் கடவுளீ என்றுனைப் பெரியோர்கள் செப்புவது பெருண்மையே
செந்தமிழை யன்றுநீ சம்பந்த மூர்த்தியாய்ச் செகமுழுது மேவிரித்தாய்
முந்தி சங்கப் புலவர் தங்கலாம் தீர்க்கவே முகனுத் தோன்றி நின்றாய்
முன்னுனைப் பாடாத ரேவணை வெருட்டி திரு முருகாறு பெற்ற தன்றி
வந்தனைசெய் யாதபொய் யாமொழியை வாழ்விக்க மார்க்கத்தில் எதிரில் வந்து
வழிமறித் தொருபாடல் பெற்றது நிரம்பாத வாரிதியின் வெள்ள மெனவே
சந்தஞ்சொ லருணகிரி தேன்பாவு பாடத் தனியமுது கொள்ள கொண்டாய்
தண்டமிழ்ச் சுவையுனைப் போலொருவர் கண்டதில்லை
தணிகா சலக் கடவுளே.

முற்றும்.